நித்ரா 2021 நாட்காட்டி

## ராசிகளும், நவகிரகங்களும் ஓர் பார்வை!!

பிறவிகளிலேயே உயரிய பிறப்பு என்பது மனிதப் பிறப்பாகும். மற்ற உயிர்களை விடவும் அறிவியலிலும், ஞானத்திலும் சிறந்தவர்களான நாம் சிந்திக்காமல், இப்போது கிடைக்கும் சிறு கால மகிழ்ச்சிக்காக நாம் பிறந்த நோக்கினை விடுத்து மற்ற வழிகளில் சென்று எண்ணற்ற பாவச் செயல்களை புரிந்தும், அந்த செயலுக்கு துணை நின்றும் நாம் அறப்பலனை குறைத்து பாவப் பலனை மென்மேலும் உயர்த்துகிறோம்.

நாம் செய்த தீயச் செயலால் விளையும் வினைகள் யாவும் நம்முடன் முடிவடைந்து விடாமல் நம்முடைய வாரிசுகளுக்கும் அதை கொடுத்து விட்டு செல்கிறோம். இவைகளே நாம் மீண்டும் மீண்டும் பிறக்க காரணமாக அமைகின்றன. இவைகளே நாம் தோஷங்களாக அனுபவிக்கின்றோம்.

ஜாதகத்தில் காட்டும் தோஷங்கள் மற்றும் சுப கிரகங்களின் பலவீனம் என்பது நாம் செய்த செயல்களின் அடிப்படையிலேயே உருவாகின்றது. ஆகவே, ஒரு ஜாதகம் என்பது ஒரு சிறந்த காலக்கண்ணாடி ஆகும். நாம் செய்த அறம் மற்றும் அறமற்ற செயல்களை எடுத்துக்காட்டுவதாகும். அது மட்டுமின்றி ஜாதகமே சிறந்த சாவி ஆகும். ஏனெனில், எதுவும் தெரியாத எதிர்காலம் எண்ணும் கதவை நன்முறையில் திறந்து நமது வாழ்க்கையை வளமாக்க கூடியதுமாகும்.

ஜாதகத்தில் இருக்கும் 12 ராசிகளில் அனைத்து கிரகங்களும் பலம் கொண்டவைகளாக இருக்கமாட்டார்கள். அதிபதிகள் சில ராசிகளில் பகை, நட்பு, ஆட்சி மற்றும் உச்சம் என அவர்கள் பலம் பெறுகிறார்கள். அதன் அடிப்படையில் அவர்களின் செயல்பாடுகள் அவர்களால் ஏற்படும் நன்மைகள் மற்றும் தீமைகள் யாவும் நிகழ்கின்றன.

ஜாதகத்தில் கிரகங்கள் பலம் பெறுவதும், பலவீனம் அடைந்தும் நாம் முற்பிறவியில் செய்த பாவ புண்ணியங்கள் அடிப்படையில் மட்டுமே. நாம் செய்யும் கர்ம பலன்களின் அடிப்படையிலும் நாம் இப்பிறவியில் செய்கின்ற அறச்செயல்களை கொண்டே நம் எதிர்காலம் சிறப்பாக அமையும்.

**நம் எதிர்காலத்தை சிறப்படைய வைக்கவும், எல்லா வல்லமைகளையும், யோகங்களையும் நம் கர்ம வினைகளையும் சரிவர அளிக்கும் நவகிரக நாயகர்கள்:**

1. சூரியன்
2. சந்திரன்
3. செவ்வாய்
4. புதன்

5. குரு (வியாழன்)
6. வெள்ளி
7. சனி
8. ராகு
9. கேது

**கிரகங்கள் நின்ற இடங்களின் அடிப்படையில் ராசிகள் பனிரெண்டாக பிரிக்கப்பட்டுள்ளது. அந்த பனிரெண்டு ராசிகள் பின்வருமாறு:**

1. மேஷம்
2. ரிஷபம்
3. மிதுனம்
4. கடகம்
5. சிம்மம்
6. கன்னி
7. துலாம்
8. விருச்சிகம்
9. தனுசு
10. மகரம்
11. கும்பம்
12. மீனம்

அதன் அடிப்படையில் பனிரெண்டு ராசிகளில் நவ நாயகர்கள் அமரும் பட்சத்தில் ஏற்படும் பலன்கள் யாவும் இனிவரும் நாட்களில் நாம் விரிவாக காண்போம்.

## ராசிகளில் சூரியன்...!!

நவகிரகங்களில் முதன்மையானவர். அனைவருக்கும் ஒளியை அளிக்கக்கூடியவர். சூரியனை மையமாக கொண்டே அனைத்து நவகிரகங்களும் இயங்குகின்றன. சூரியன் பற்றிய பல தகவல்களையும் நவகிரகம் என்னும் தொடர் மூலம் நாம் அறிந்தோம். இனி சூரிய தேவர் ஒவ்வொரு ராசிகளில் செய்யும் செயல்கள் மற்றும் அவரால் ஏற்படும் குணங்களை பற்றி நாம் காண்போம்.

## மேஷ ராசியில் சூரியன் இருந்தால் கிடைக்கும் பலன்கள்!!

» மேஷ ராசியின் அதிபதியான செவ்வாயுடன், சூரியன் நட்பு கிரகமாக விளங்கூடியவர். மேலும், மேஷ ராசியில் சூரியன் உச்சம் அடைகின்றார். சூரியன் பிதுர்காரகர் ஆவார். எனவே, மேஷ ராசியில் சூரியன் இருக்க பிறந்தவர்கள் எதையும் முன்னின்று செய்யும் தலைமைப் பண்பு கொண்டவர்கள்.

» தந்தைவழி ஆதரவும் வழிகாட்டுதலும் உண்டாகும்.

» பிள்ளைகள் மூலம் ஆதரவான சூழலும், பெருமையும் உண்டாகும்.

» பூர்வீக சொத்துகளால் இலாபம் உண்டாகும்.

» எதையும் நேர்மையாக அணுக வேண்டும் என்னும் குணமுடையவர்கள்.

» முன்கோப குணம் கொண்டவராகவும் ஆனால், தாம் செய்தது தவறு என்னும் அறியும் பட்சத்தில் உடனடியாக மன்னிப்பு கேட்கும் குணம் கொண்டவர்கள்.

» மனதில் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக பேசக் கூடியவர்கள்.

» பெரியோர்களிடத்தில் மதிப்பும், மரியாதையும் கொண்டவர்கள்.

» தொழில் திறமை கொண்டவர்களாகவும் விளங்கக்கூடியவர்கள்.

» ஆன்மிக எண்ணங்கள் மிகுந்தவராகவும், சாஸ்திரங்களில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும் இருப்பவர்கள்.

» யாருக்கும் பயம் கொள்ளாதவராகவும், யாருக்கும் அடிபணியாத குணம் உள்ளவராகவும் இருக்ககக்கூடியவர்கள்.

» புத்திரர்கள் மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள். அவர்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றுபவராக இருப்பார்கள்.

» மேலும், சூரியன் உச்சம் பெறுவதால் சூடு சம்பந்தமான உடல் உபாதைகள், தலை வலிகள் அவ்வப்போது தோன்றக்கூடும்.

## ரிஷப ராசியில் சூரியன் இருந்தால் கிடைக்கும் பலன்கள் !!

» ரிஷப ராசியின் அதிபதியான சுக்கிரனுடன் சூரியன் பகைப்பெற்று விளங்குகிறார். இந்நிலையில் இவரால் ஏற்படும் பலன்கள் பின்வருமாறு :

» தாயின் மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள்.

» வீடு, மனை போன்றவற்றால் ஆதாயம் அடையக் கூடியவர்கள்.

» உணவுகளை ருசித்து சாப்பிடக்கூடியவர்கள்.

» வாகன வசதி நிறைந்தவர்கள்.

» உடல் ஆரோக்கியத்தில் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டாலும், அதை இவர்களே சரி செய்து கொள்வார்கள்.

» பிறரின் பாராட்டுகளால் மயங்க கூடியவர்கள்.

» பெண்கள் இடத்தில் பகையும், நட்பும் கொண்டவர்கள்.

» புத்திசாலித்தனமும் சுய முயற்சியும் கொண்டவர்கள்.

» கலைகள் மீது ஆர்வம் உடையவர்கள்.

» சுகமான வாழ்க்கையை விரும்பக் கூடியவர்கள்.

» உறவினர்கள் மீது அன்பும் மரியாதையும் கொண்டவர்கள்.

» சொந்த தொழிலின் மூலம் இலாபம் அடையக்கூடியவர்கள்.

» அவ்வப்போது சுவாசித்தலில் பிரச்சனைகள் தோன்றி மறையும்.

## மிதுன ராசியில் சூரியன் இருந்தால் கிடைக்கும் பலன்கள் !!

» மிதுன ராசியின் அதிபதியான புதனுடன், சூரியன் நட்புடன் உள்ளார். இதனால் ஏற்படும் பலன்கள் பின்வருமாறு :

» எடுத்தச் செயல்களை முடிப்பதில் மிகுந்த வேகம் கொண்டவர்கள்.

» எந்த காரியங்களானாலும் நினைத்தவுடன் கற்கும் ஆற்றல் கொண்டவர்கள்.

» போட்டிகளில் மிகுந்த ஈடுபாடுகள் உடையவர்கள்.

» மனதில் பட்டதை யாருக்கும் பயப்படாமல் தெரிவிக்கும் குணம் உடையவர்கள்.

» எதற்கும் கவலைக்கொள்ள மாட்டார்கள்.

» எந்நிலையிலும் கௌரவத்தை விட்டுக் கொடுக்காதவர்கள்.

» எதிர்களை வெல்லும் வல்லமை உடையவர்கள்.

» வியாபாரத்தில் அதிக ஈடுபாடு உடையவர்கள்.

» மிகுந்த நினைவாற்றல் உடையவர்கள்.

- கம்பீரமான பேச்சுக்களை உடையவர்கள்.
- இவர்களுக்கு இளைய உடன்பிறப்புகளால் சாதகமான சூழல் உண்டாகும்.
- எளிதில் புரிந்து கொள்ளும் திறமை உடையவர்கள்.
- தைரியத்துடனும், நேர்மையுடனும் செயல்பட கூடியவர்கள்.
- வாழ்க்கையை ரசித்து வாழ வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்.
- புதிய சிந்தனைகள் மற்றும் முயற்சிகள் இவர்களிடம் மிகுந்து காணப்படும்.

**கடக ராசியில் சூரியன் இருந்தால் கிடைக்கும் பலன்கள் !!**

- கடக ராசியின் அதிபதி சந்திரன் ஆவார். சூரியன் சந்திரனுக்கு நட்பு என்ற நிலையில் இங்கு நிற்கின்றார். இதனால் உண்டாகும் பலன்கள் பின்வருமாறு :
- குடும்பத்தின் மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள்.
- மிகுந்த வைராக்கிய குணம் உடையவர்கள்.
- உண்மையான பேச்சுக்களையும், சொன்ன வாக்குறுதிகளையும் சொன்ன விதத்தில் நிறைவேற்றக் கூடியவர்கள்.
- தனது விருப்பம் போல் வாழக் கூடியவர்கள்.
- ஏட்டு கல்வியை காட்டிலும் அனுபவ அறிவு மிகுந்தவர்கள்.
- போராட்ட குணம் உடையவர்கள். தர்க்கம் புரிவதிலும் வல்லவர்கள்.
- உயர்ந்த செல்வாக்கு உடைய நண்பர்களை உடையவர்கள்.
- புராணங்கள் மற்றும் ஆன்மிகத்தில் ஈடுபாடு உடையவர்கள்.
- நிலையான கொள்கைகளை உடையவர்கள்.
- வரவுக்கு ஏற்ற செலவுகளை கொண்டவர்கள் இருப்பினும் வீண் செலவுகளை செய்ய மாட்டார்கள்.
- மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் பிறருக்கு உதாரணமாகவும் விளங்கக்கூடியவர்கள்.
- முன்கோபம் உடையவர்கள். செய்த தவறுக்காக வருந்தும் குணமும், மன்னிப்பு கேட்கும் குணமும் உடையவர்கள்.
- எதிலும் எங்கும் உண்மையை விரும்பக்கூடியவர்கள்.

- மற்றவர்களுக்கு உதவுவதில் விருப்பம் உடையவர்கள்.
- சுயநலம் இல்லாத பொது நல எண்ணத்துடன் செயல்பட கூடியவர்கள்.
- நுட்பமான கலைகளை கற்பதில் விருப்பம் உடையவர்கள்.
- எவருக்கும் கட்டுப்படாமல் தன் விருப்பம் போல் வாழ விரும்புவார்கள்.

**சிம்ம ராசியில் சூரியன் இருந்தால் கிடைக்கும் பலன்கள் !!**

- சிம்ம ராசியின் அதிபதி சூரியன் ஆவார். தன்னுடைய சொந்த வீட்டில் அதாவது தனது ஆட்சி வீட்டில் இருக்கும் போது மிகுந்த பலம் பெறுகிறார். இனி சிம்மத்தில் சூரியன் இருக்கும் போது ஏற்படும் பலன்கள் பின்வருமாறு :
- கம்பீரமான தோற்றம் உடையவராக இருப்பார்கள்.
- பார்வையிலேயே அனைவரையும் பயப்படுத்தக்கூடியவர்கள்.
- தேவையற்ற வீண் பேச்சுக்களை விரும்பாதவர்கள்.
- எடுத்த காரியத்தை முடிப்பதில் மிகுந்த வேகம் கொண்டவர்கள்.
- எல்லாம் தெரிந்தாலும் எதையும் தெரியும் என்று கூற மாட்டார்கள்.
- அலட்சியமாக இருப்பார்கள். ஆனால், அனைத்தையும் கவனிக்கக்கூடியவர்கள்.
- இவர்கள் எடுத்த முடிவை எளிதில் மாற்றமாட்டார்கள்.
- நபர்களை அறிந்து பணி கொடுப்பதில் வல்லவர்கள்.
- பெருந்தன்மையையும், நேர்மையான குணத்தையும் கொண்டவர்கள்.
- அனைவரிடமும் நன்றாக பழகக்கூடியவர்கள்.
- ஒப்பனை செய்து கொள்வதில் விருப்பம் உடையவர்கள்.
- ஆழ்ந்த சிந்தனைக்கு பின்னே எதையும் பேசக் கூடியவர்கள்.
- எந்நிலையிலும் வளைந்து கொடுக்காத நேர்மையான குணத்தைக் கொண்டவர்கள்.
- பக்தி கொண்டவர்கள். ஆனால், அதை வெளிப்படுத்திக் கொள்ளாதவர்கள்.

## கன்னி ராசியில் சூரியன் இருந்தால் கிடைக்கும் பலன்கள் !!

» கன்னி ராசியின் அதிபதி புதன் ஆவார். சூரியன் புதனுடன் சமம் என்ற நிலையில் இங்கு நிற்கின்றார். இனி சூரியன் கன்னியில் இருக்கும் போது ஏற்படும் நன்மைகள், தீமைகள் பின்வருமாறு:

» தன்னுடைய பேச்சுக்களினால் தானே மாட்டிக்கொள்வார்கள்.

» செய்யும் செயலில் உள்ள அலட்சிய போக்கினால் காலதாமதம் உண்டாகும்.

» முன் கோபத்தால், கிடைக்கும் வாய்ப்புகளை இழந்து பின் அதற்காக வருத்தப்படமாட்டார்கள்.

» கடுமையான பேச்சுக்களாலும், அலட்சிய நடவடிக்கையாலும், குடும்பத்திலும் சக பணியாளர்களிடம் அனுகூலமான சூழல் உண்டாகாது.

» பெற்றோர் மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள்.

» எந்த பிரச்சனைகள் இருக்கும் பட்சத்திலும் படுத்த உடனே தூங்கிவிடுவார்கள்.

» ஆன்மிக பயணங்களை அடிக்கடி மேற்கொள்வார்கள்.

» தத்துவம் பேசுவதில் வல்லவர்கள்.

» தற்பெருமை பேசும் குணம் உடையவர்கள்.

» பாட்டியின் மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள்.

» எதிலும் புகழ்ச்சியை விரும்பக்கூடியவர்கள்.

» வீண் செலவு செய்வதில் வல்லவர்கள்.

» மனைவியின் மீது அன்பும், அவர்களின் தேவைகளையும் நிறைவேற்றக்கூடியவர்கள்.

## துலாம் ராசியில் சூரியன் இருந்தால் கிடைக்கும் பலன்கள் !!

» துலாம் ராசியின் அதிபதி சுக்கிரன் ஆவார். மேஷத்தில் உச்சம் பெற்ற சூரியன் துலாம் ராசியில் நீசம் பெறுகிறார். துலாம் ராசியில் சூரியன் சஞ்சரிப்பதால் ஏற்படும் பலன்கள் பின்வருமாறு:

» எதிர்பாலின மக்களால் அனுகூலமான பலன்கள் ஏற்பட்டாலும் அவர்களால் சில மனக்கசப்புகள் நேரிடலாம்.

» மனோபலம் குறைவாக இருக்கும்.

- எதையும் செய்து முடிக்கும் திறமை கொண்டவர்கள்.
- குழப்பமின்றி தெளிவான முடிவுகளை எடுக்கக்கூடியவர்கள்.
- இறை நம்பிக்கையும் சாஸ்திரங்கள் மீது மிகுந்த ஈடுபாடும் கொண்டவர்கள்.
- மரியாதை இருக்கும் இடத்திற்கு மட்டும் செல்லக்கூடியவர்கள்.
- பிறரின் தன்மை அறிந்து அதற்கேற்றார் போல் பழகக்கூடியவர்கள். பிரச்சனைகளில் அமைதியான முறையில் தீர்வை எதிர்பார்க்கக்கூடியவர்கள்.
- சொகுசான வாழ்க்கையை வாழக்கூடியவர்கள்.
- எண்ணங்களால் அவ்வப்போது உடல் நலம் பாதிக்கப்படும்.
- தாயின் மீது மிகுந்த அன்பு உடையவர்கள்.

### விருச்சிக ராசியில் சூரியன் இருந்தால் கிடைக்கும் பலன்கள் !!

- செய்யும் பணியே முதன்மையானது என எண்ணக்கூடியவர்கள்.
- காரியம் நிறைவேறியதும் அதற்கு தடையாக இருந்தவர்களை பார்த்துக்கொள்ளக் கூடியவர்கள்.
- அதிகமான கோபங்கள் ஏற்பட்டாலும் அதை சமாளித்துக் கொள்ளும் வல்லமை உடையவர்கள்.
- எண்ணிய பணியை விரைவாக செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.
- பல தொழில்களை செய்யும் திறமை உடையவர்கள். சிறந்த நிர்வாகிகள் ஆவார்.
- செய்யும் பணியில் உண்மையாகவும், நேர்மையாகவும் செயல்படுவார்கள்.
- அரசு சம்பந்தமான துறைகளில் வாய்ப்புகள் கிடைக்கும்.
- தெய்வ நம்பிக்கைக் கொண்டவர்கள்.
- தைரியம் மிகுந்தவர்கள்.
- பிரச்சனைகளை கண்டு மனம் தளராதவர்கள்.
- சக ஊழியர்களை அனுசரித்து வேலை வாங்கும் திறமை கொண்டவர்கள்.
- எதிலும் விளம்பரத்தை விரும்பாதவர்கள்.